உயர்கல்வி (ஜே2) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.

<u>கடிதம் (நிலை) எண். 315 நாள் 13.11.2017</u>

அனுப்புநர்
திரு. சுனில் பாலீவால் இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

செயலாளர்
பேரிடர் மேலாண்மைத்துறை
28 NOV 2017
தலைமைச் செயலகம், சென்னை-600 009.

பெறுநர்
மருத்துவக் கல்வி இயக்குநர்,
கீழ்ப்பாக்கம்,
சென்னை- 600 010.

ஐயா,

பொருள் : உயர்கல்வி – அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் தொழிற்கல்லூரிகளில் ஒற்றை சாளர கலந்தாய்வின் மூலம் சேர்க்கை பெறும் முதல் பட்டதாரி மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்விக் கட்டணச் சலுகையினை ஒரே குடும்பத்தைச் சார்ந்த முதல் இரட்டையர்கள் இருவருக்கும் வழங்குதல் – தெளிவுரை – குறித்து

பார்வை:
1. அரசாணை (நிலை) எண் 85, உயர்கல்வி (ஜே2)த்துறை நாள் 16.4.2010.
2. அரசு கடித எண் 8483/ஜே1/2010 நாள் 17.5.2010.
3. அரசு கடித எண் 9275/ஜே2/2010–1, நாள் 31.5.2010.
4. தங்களின் கடிதம் எண் 31572/BP(2)/2016 நாள் 8.2.2017 மற்றும் 26.7.2017
5. அரசு கடிதம் எண்.2330/ஜே2/2017-1 நாள் 3.3.2017
6. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கடிதம் எண். 8708 / ஜே2/2017 நாள் 23.9.2017.

------

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் 2010–2011 ஆம் கல்வியாண்டு முதல் இதுவரை பட்டதாரிகளே இல்லாத குடும்பத்திலிருந்து ஒற்றைச்சாளர முறையில் தொழிற்கல்வி பயில தேர்வுபெற்ற மாணவர்களுக்கு சாதிப் பாகுபாடின்றியும், வருமானத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமாலும், அம்மாணவர்கள் செலுத்த வேண்டிய கல்விக் கட்டணம் (Tuition fee) முழுவதையும் அரசே ஏற்கும் என ஆணை வெளியிடப்பட்டது. பார்வை இரண்டில் காணும் கடிதத்தில், D.M.E., D.E.E., D.C.E மற்றும் D.Pharm போன்ற பட்டயப் படிப்புகளை (Diploma) பட்டப் படிப்பிற்கு இணையாகக் கருத இயலாது எனவும், இப்படிப்புகள் பட்டப் படிப்பிற்கு இணையானதும் அல்ல என்றும் தெரிவித்து D.M.E., D.E.E., D.C.E மற்றும் D.Pharm போன்ற பட்டயப் படிப்பினை விண்ணப்பதாரரின் குடும்பத்தினர் படித்திருந்தால் அவர்களின் குடும்பத்தைச் சார்ந்த மாணவியருக்கு முதல் தலைமுறை பட்டதாரி சான்றிதழ் வழங்க வட்டாசியருக்கு தகுந்த அறிவுரை வழங்க அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். பார்வை மூன்றில் காணும் கடிதத்தில், மனுதாரரின் குடும்பத்தில் யாரேனும் பட்டப் படிப்பினை படித்து, பட்டப்படிப்பினை முடிக்காமல் விட்டுவிட்டாலும் அல்லது பட்டப் படிப்பினை படித்துக் கொண்டு இருந்தாலும் மனுதாரர் பட்டதாரி இல்லாத குடும்பத்தைச் சார்ந்தவர் என்றுதான் கருதப்பட வேண்டும் என தெரிவித்து மனுதாரரை முதல் தலைமுறை பட்டதாரி சான்றிதழ் வழங்க அறிவுரை வழங்குமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

2. பார்வை நான்கில் காணும் தங்களின கடிதத்தில், ஒரு குடும்பத்தைச் சார்ந்த இரட்டையர்கள் இருவருக்கும் முதல் தலைமுறை பட்டதாரி சலுகை வழங்க இயலுமா என்று தெளிவுரை கேட்கப்பட்டுள்ளது. பார்வை ஆறில் காணும் கடிதத்தில், பார்வை ஒன்றில் காணும் அரசாணையின்படி ஒரு குடும்பத்தில் முதல் தலைமுறை பட்டதாரி, ஒருவர் மட்டுமே என சான்று பெற்று ஒருவருக்கு மட்டுமே முதல் தலைமுறை பட்டதாரி கல்வி கட்டண சலுகை வழங்கப்பட்டு வருகிறது என்றும் பார்வை ஐந்தில் காணும் அரசு கடிதத்தில் கோரப்பட்ட குறிப்புரைக்கு இணங்க அதிக எண்ணிக்கையில் இந்த நிகழ்வு வர வாய்ப்பு இல்லை என்பதையும் கருத்தில் கொண்டு சிறப்பினமாக கருதி, சிறப்பு நிகழ்வாய் பிறந்திருக்கும் முதல் இரட்டையர்களுக்கு மட்டும் முதல் தலைமுறை பட்டதாரி உதவி தொகை இருவருக்கும் வழங்க அரசு பரிசீலிக்கலாம் என தொழில்நுட்பக் கல்வி ஆணையர் பரிந்துரைத்துள்ளார்.

3. அரசாணை (நிலை) எண் 85, உயர்கல்வி (ஜே2)துறை நாள் 16.4.2010யின்படி, 2010–2011 ஆம் கல்வியாண்டு முதல் அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் தொழிற் கல்லூரிகளில் ஒற்றை சாளர கலந்தாய்வின் மூலம் சேர்க்கை பெறும் முதல் பட்டதாரி மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்விக் கட்டணச் சலுகையினை, ஒரு குடும்பத்தில் இரட்டையர்கள் பிறப்பது மற்றும் அவர்கள் இருவரும் தொழிற்கல்வி (Professional course) கோ விண்ணப்பிப்பது போன்ற நிகழ்வு, மிகவும் அரிதான நிகழ்வு என்பதாலும், ஒரே சமயத்தில் இரு குழந்தைகளுக்கும் கல்விச் செலவை மேற்கொள்வது பெற்றோர்களுக்கு மிகவும் சிரமம் என்பதனையும் கருத்தில் கொண்டு, இந்நேர்வினை ஒரு சிறப்பு நிகழ்வாகக் கருதி, பட்டதாரி இல்லாத குடும்பத்தில், முதல் பட்டதாரி சலுகை கோரும் முதல் இரட்டையர்கள் இருவருக்கும், வழங்கலாம் என்று தங்களுக்கு தெரிவித்துக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

13/11/2017

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

13-11-17

நகல்

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முதன்மைச் செயலாளர்/
வருவாய் நிர்வாக ஆணையர், எழிலகம், சேப்பாக்கம், சென்னை – 5
தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை -25
கல்லூரி கல்வி இயக்குநர், சென்னை – 6.
~~பதிவாளர், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை -25.~~
செயலாளர்,
பொறியியல் கல்வி மாணவர் சேர்க்கை, அண்ணா பல்கலைக்கழகம்,
சென்னை – 25.
அனைத்து துறைகள், சென்னை -9
உயர்கல்வித் துறை அமைச்சரின் சிறப்பு தனிச் செயலாளர், சென்னை -9
உயர்கல்வித்துறையின் அனைத்து பிரிவுகள், சென்னை -9
உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை-9
அரசாணை (நிலை) எண் 85, உயர்கல்வி (ஜே2)துறை நாள் 16.4.2010
இகோ/ உதிரி